திரு. ஓ்ரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு ஹெலிகாப்டர் மட்டும் இருப்பதால்தான் இது அடிக்கடி ரிப்பேர் ஆகிறது. திடீரென்று தமிழ்நாட்டில் வறட்சி, வெள்ளம் போன்று வருகின்றன. அரசாங்கத்தின் அத்தியாவசியத் தேவையை முன்னிட்டும், வெள்ளக் காலங்களில் பல உயிர்களைக் காப்பாற்றுகிற வகையிலும் மாவட்டத்திற்கு‘ஒரு ஹெலிகாப்டர் வாங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச ஆரம்பிக்கிறபோது தொகுதிக்கொன்று கேட்பார்கள் என்று நினைத்தேன். நல்ல வேளை, மாவட்டத்திற்கு ஒன்று என்று நிறுத்திக் கொண்டார்கள். இப்போது அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. அது ஒன்றே போதுமென்று அரசாங்கம் கருதுகிறது.

தருமபுரி மாவட்டம் மொரப்பூரில் ரெயில்வே மேம்பாலம்.

241—(*வினா எண். 10580) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ரெயில்வே லைனில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, மொரப்பூர் ரெயில்வே லைனில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம் மொரப்பூரில் மிகவும் முக்கியமான பாதையாக அது இருக்கிறது. குறிப்பாக ஏழெட்டு ஆண்டுக் காலமாக ஹரூர் தாலுக்காவிலிருந்து பாலக்கோடு சர்க்கரை ஆலைக்கு இரவு பகலாக லாரிகளில் கரும்பு எடுத்துப் போகிறார்கள். இரவு நேரங்களில் அந்த ரெயில்வே கேட்டை மூடிவிடுகிறார்கள். இதனால் போக்குவரத்தில் தடை ஏற்பட்டு விவசாயிகளுக்கு குந்தகம் ஏற்படுகிறது. ஆலைக்கு காலாகாலத்தில் போய் சேர வேண்டிய கரும்புப் போக்குவரத்தில் தடை ஏற்படுகிறது. பொது ஜனங்களுக்கு நிறைய இடையூறு ஏற்படுகிறது. ஆகவே அந்த மேம்பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு சாத்தியகூறுகள் இலையென்றால் அந்த ரெயில்வே லைனுக்கு கீழே இருக்கும் கீழ்ப் பாலத்தில் லாரிகளை அனுமதிப்பதற்கு இரயில்வே இலாக்காவுடன் தொடர்பு கொண்டு, அவர்களைத் தக்கமுறையில் அணுகி, அவர்களின் இசைவைப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சமீபத்தில் மத்தியஅரசாங்கம் ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்றால் குறைந்த பட்சம் ஒரு லட்சம் முறை ஒரு ஆண்டிற்கு அதன் வழியாக ரெயில்கள் சென்று வரவேண்டுமென்று ஒரு அளவை நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். அதை பார்க்கிறபோது அந்த அளவை இது எட்டிப் பிடிக்காத காரணத்தால்தான் இதை எடுத்துக்கொள்ள முடியாத நிலையிருக்கிறது என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அடுத்து அந்த ரெயில்வே லைனுக்குக் கீழே போக்குவரத்து போகிற அளவிற்கு அமைப்பை ஏற்படுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாக நெடுஞ்சாலைத் துறையில் சொல்லி ஆய்வு செய்து தகுந்த பதில் கொடுக்கப்படும்.

திரு. டி. எம். வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இப்படி மேம்பாலம் கட்டுவதில் மாநிலத்தில் எவ்வளவு இடங்களுக்கு அனுமதி கேட்டு இன்னும் கிடைக்காமல் இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன். தேசிய நெடுஞ்சாலையில் பெங்களூர்—ஜோலார் பேட்டை ரெயில்வே பாதைக்கு குறுக்கே, நாட்றாம்பள்ளிக்கும் பர்கூருக்கும் நடுவில் ஒரு மேம்பாலம் மிகவும் தேவையாக உள்ளது. தேசிய நெடுஞ்சாலையாக இருப்பதால் ஏறக்குறைய ஒரு நிமிடத்திற்கு ஒரு லாரி என்ற அளவில் போக்குவரத்து இருக்கிறது. நேற்று இரவுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வழியாக வருகிறபோது 100 லாரிகளுக்கு மேல் அந்த வழியில் நின்று போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்ததைக் கண்டார்கள். அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் அமைக்கஅரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல பாண்டிச்சேரிக்கும், பெங்களூருக்கும் இடையே பர்கூர் தொகுதியில் உள்ள சாமல்பட்டியில் மிகவும் தேவையான ஒரு மேம்பாலம் கட்டவேண்டிய நிலையிருக்கிறது. எனவே, இவை போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிற காரணத்தால், உடனடியாக அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இருக்கின்ற பிரச்சனையை நேரடியாகப் பார்க்கிற வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. ஆனால் நிதிப் பிரச்சனை காரணமாகத் தான் அதை எடுத்துக்கொள்ள முடியாத நிலையிருக்கிறது என்றும், மத்திய அரசாங்கம் சில வரைமுறைகளை நிர்ணயித்து இருக்கிறது என்றும், அந்த வரைமுறையிலே இது வராத காரணத்தால் இதை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதையும் நான் ஏற்கனவே சொன்னேன். எனவே இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து, அடுத்த ஆண்டு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறபோது, இதையும் சேர்த்து நாம் பரிந்துரை செய்யலாம். மொத்தமாக நாம் எவ்வளவு அனுமதி கேட்டு இருக்கிறோம் என்ற குறிப்பு தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாகத் தருகிறேன்.